International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 02 April to June 2020 www.irjtsjournal.org

# நல்வழி கூறும் வாழ்வியல் நெறிகள்

முனைவர்.பெ.விக்ரமன்
*இடைநிலைஆசிரியர்*
*ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி, சோலைத்தேவன்பட்டி*
*மயிலாடும்பாறை ஒன்றியம்,தேனி(மா)-625579*

**முன்னுரை**

'ஒளவை' என்னும் பெயர் அறியார் இத்தமிழ் கூறும் நல்லுலகில் யாரும்உண்டோ?. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள் என கற்றவர் முதல் கல்லாதவர் வரையிலும் எளிதாக அறிந்தும் புரிந்து எடுத்துமொழியக் கூடிய வகையிலானநூல்கள் படைத்துள்ளார் . ஒளவையார் இயற்றிய நல்வழி நூல் கடவுள் வாழ்த்துடன் 41 பாடல்களைக் கொண்டது.கடவுள் வாழ்த்து தவிர உள்ள இதர நாற்பது பாடல்களில் கூறியுள்ள மானுட வாழ்கைக்கு தேவையான வாழ்வியல் நெறிகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இறைநெறி**

முதன் முதற்கடவுளான யானைமுகத்தனான விநாயகப்பெருமானிடம் பாலும், தேனும், பாகும்,பருப்பும் நான்கையும் உனக்கு அளிக்கிறேன். எனக்கு இயல்,இசை,நாடகம்,ஆகிய மூன்றையும் கொண்டுள்ள தமிழை எனக்கு அருள்வாயாக என வேண்டுகிறார்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலுங் கலந்துனக்கு
நான்தருவேன் - கோலஞ்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா. (நல்வழி கடவுள் வாழ்த்து)

சைவநெறி ஐந்தெழுத்து மந்திரமான சிவாய நம என்பதனைதியானிப்போருக்கு விதியால் வரும் துன்பம் இல்லை எனசிவநெறி கருத்தினை பாடுகிறார்.

' சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு

அபாயம் ஒருநாளும் இல்லை'- (நல்வழி -15)

இவ்வுலகில் ஒவ்வொரு அனுவும் இறைவனின் அசைவுபடியே நிகழ்கிறது,மனிதனின் கருத்துப்படி எதுவும் நிகழா. எனவே நாம் வாழ்வில் இறைநெறி பின்பற்றவேண்டும் என்னும் கருத்தினைவலியுறுத்துகிறார்.

"செய்குவோம் கொல்லோ நல்வினை?" எனவே

ஐயம் அறா ஆர் கசடுஈண்டு காட்சி

……………………………………..

தீதுஇல் யாக்கையோடு மாய்த்தல் தவத் தலையே

புறநானூறு 214

புறநானூற்றுப்பாடல் வாழ்வில் நல்வினை செய்தால் தக்க விண்ணுலக இன்பம் அல்லது மறுபிறப்பின்மை கிடைக்கும் என்றநல்வினையின் இன்றியமையாமையினை வலியுறுத்துகிறது.

புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாட் செய்த அவை

மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் -எண்ணுங்கால்

ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோா சொல்லூந்

தீதொழிய நன்மை செயல் (நல்வழி-1)

நல்வழி பாடலில் ஔவை நல்வினை செய்வதன் மூலம் புண்ணியமும் , பாவத்தால் துன்பமும் கிடைக்கிறது. ஆகவே பாவத்தை ஒழித்து புண்ணியம் செய்வோம் என்ற அறத்தினை வலியுறுத்துகிறாா். இக்கருத்தினையே அனைத்து மதத்தினரும் வலியுறுத்துகின்றனா் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

**குறள்வழி மரபு**

வள்ளுவனின் திருக்குறளில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகள் சாா்ந்த கருத்துகள் ஔவையின் நல்வழிகளிலும் ஒன்றிவருவது நோக்கத்தக்கது.

இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவா்ந் தற்று(குறள்-100)

வாழ்வில் பேசுவதற்கு எத்தனையோ நல்ல சொற்கள் இருக்க வன்சொற்களை பயன்படுத்துவது நன்மை தராது என்று குறிப்பிடுகிறாா்.

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்

பட்டுருவுங் கோல்பஞ்சில் பாயாது-நெட்டிருப்புப்

பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்

வேருக்கு நெக்கு விடும் (நல்வழி-33)

இப்பாடலில் ஔவை யானையின் மீது பாயும் அம்பு பஞ்சின் மீது பாயாது , பிளக்க இயலாத கரும்பாறையை பசுமரத்தின் வோ் பிளந்து விடுவதுபோல் வன்சொற்கள் எச்சூழலிலும் மென்சொற்களை வெல்லாது என்றுரைக்கிறாா்.ஆகவே நாம் வாழ்வில் வன்சொற்களின்றி மென்சொற்களையே பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறாா்.

**உழவின் சிறப்பு**

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வாா்மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்வா். குறள் -1033

உழவின் பெருமையினை வள்ளுவா் கூறுவது போன்று ஔவையும் தம் நல்வழியில் உழுது பயிா் செய்பவருடைய வாழ்வானது சுதந்திரமானதாகவும் ,குற்றமற்றதாகவும் , அழிவில்லாத வாழ்வையும் கொண்டது என உழவுத்தொழிலின் சிறப்பையும் பெருமையையும் ஔவையாா் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்

பழுதுண்டு வேறோர் பணிக்கு'.( நல்வழி 12)

**நிலையாமை**

திருமந்திரம் , நாலடியார் , திருக்குறள் ஆகிய நூல்கள் யாக்கை நிலையானதன்று. அதன் மீது நாட்டம் கொள்ளாமல் அறநெறிகளின் படிசெயல்பட வேண்டும்எனஅறிவுறுத்துகிறது. யாக்கைநிலையாமை உணர்ந்த ஞானிகள உடலின் மீது பற்றற்றிருப்பார்கள் என்கிறார் ஔவை.

'அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்கமல நீர்போற்

பிறந்திருப்பார் பேசார் பிறர்க்கு' (நல்வழி -7)

**பிறர்மனை நோக்காமை**

'பிறன்னை நயத்தல் பெருந்தீது'– என்ற கருத்தினை நாலடியார் மிக அழகாக உரைக்கிறது."

'காய்ச்ச பலாவின்கனியுண்ண மாட்டாமல் ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே" (திரு-201)

– பிறர்மனை நோக்குவோரை திருமூலர் அவ்வாறு குறிப்பிடுகிறார்.

நாலடியார் , திருமந்திரம் , திருக்குறள் ஏனைய நூல்களில் குறிப்பிட்டுள்ள காமத்தை அடக்கல் , பிறர்மனை நோக்காமை ஆகியனவற்றை பின்பற்றுவோரையே சான்றோர் எனக் கருதுவர்.

நண்டுசிப்பிவேய்கதலி நாசமுறுங் காலத்தில்-

கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்

போதந் தனங்கல்வி பொன்றவருங் காலம்இயல்

மாதர்மேல் வைப்பார் மனம் (நல்வழி -36)

இப்பாடலில் பிறர்மனை நோக்கும் எண்ணம் தோன்றும் பொழுதே அவருடைய ஞானம், செல்வம் , கல்வி எனும் மூன்றும் அழியத் தொடங்கி விடும். ஆகவே பிறர்மனை நோக்குதல் தவறு என ஔவையார் இடித்துரைக்கிறார்.

**நான்கும் ஐந்தும்**

நல்வழி நூலில் தீராத வசை தரக்கூடிய நான்கு கூறுகள் பற்றி அழகுணர எடுத்துரைத்துள்ளார். இலக்கணபிழையுடைய பாட்டும் , நல்லெழுக்கம் இல்லாத உயர்குலம் , தவறுதலடையும் வீரமும் , கற்பில்லாத மனைவியோட கூடிய இல்வாழ்க்கை ஆகியகூறுகள் இல்லா வாழ்வை பெற வேண்டும் என்கிறார்.

திருநீரோ, திருமண்ணோ இல்லாத நெற்றி பாழ், நெய்யில்லா உணவு பாழ் , உடன்பிறப்பு இல்லா வாழ்வு பாழ் , மனைவியில்லா வீடு பாழ் இவ்வைந்தும் இல்லா வாழ்வுபாழ் எனக் குறிப்பிடுகிறார். இவ்வைந்தும் ஒருவருக்கு கிடைத்தால் அவர் வாழ்வு மேன்மையடையும் என்பது நோக்கத்தக்கது.

**பறந்து போகும் பத்து**

நல்வழி நூலில் ஔவையார் பசி வந்தால் மனிதனிடம் காணப்படக் கூடிய பத்து குணநலன்கள் பறந்து போகும் எனக் குறிப்பிட்டுள்ளார். பசியினை விட இவ்வுலகில் கொடிய நோய் பிறிதொன்றுமில்லை என்பதனை எடுத்துரைத்துள்ளார்

மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை

தானந் தவம்உயர்ச்சிதாளாண்மை- தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்

பசிவந் திடப்பறந்து போம் (நல்வழி-26)

**இருகுலம்**

இன்றைய காலகட்டத்தில் பாரில் பலநூறு சாதி அமைப்புகள் காணப்படுகிறது. ஆனால் ஔவையார் பாரில் இரண்டே இரண்டு சாதி மட்டுமே உண்டு. அதுவும் ஈகையின் அமைப்பிலே. மற்ற சாதி ஏதுமில்லை என்றுரைக்கிறார்.

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்

பட்டாங்கில் உள்ள படி. (நல்வழி-2)

**உயிரினும் மேல்**

ஒட்டார் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே

கெட்டான் எனப்படுதல் நன்று –குறள் 967

இக்குறளில் வள்ளவர் மதியாதவர் பின் சென்று மானம் இழந்து வாழ்வதைவிட உயிர் விடல் மேல் எனக் கூறி உயிரை விட மானமே பெரிது எனக் குறிப்பிடுகிறார்.

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்

இச்சைபல சொல்லி இடித்துண்கை- சிச்சீ

வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது

உயிர்விடுகை சால உறும். (நல்வழி -14)

ஔவையார் பிறரிடத்தில் இச்சை பேசி வாங்கி உண்டு மானம் இழந்து உயிர்வாழ்வதை விட உயிர்விட்டு மானத்தை நிலைநிறுத்தல் நன்று என குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

**முடிவுரை**

நல்வழி பாடலில் மானுடவாழ்விற்குத் தேவையான இறைநெறி, குறள்வழிமரபு, வசை, பாழ் , சாதியின்மை,மானம் , யாக்கை நிலையாமை, பசியினால் இழப்பது,ஈகையின் சிறப்பு ஆகிய நல்வாழ்வியல் நெறிகளை நமக்கு ஔவையார் அளித்துள்ளார். ஆகையால்தான் 'ஔவை வாக்கு தெய்வவாக்கு' என்பர்."மற்ற செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை.அவற்றைத் தமிழ்நாடு மட்டும் சமைத்துக்கொள்ள வல்லது.ஔவை பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம்" என ஔவையின் பெருமை உணர்ந்து பாரதி கூறுகிறர். ஔவை கூறிய வாழ்வியல் நெறிகள் படி நடப்போம் வாழ்வில் மேன்மை பெறுவோம்.

**குறிப்புகள்**


1. ந.மு.வேங்கிடசாமி நாட்டார் - நீதி நூல்கள்
2. மு.வ.உரை –திருக்குறள்
3. திருமந்திரம்
4. நாலடியார்
5. பாரதியார் கட்டுரைகள் பக்-160
6. புறநானூறு